www.padippakam.com

# இயக்கம்

# வெட்டிப் பேச்சு வேண்டாம்!



தங்கம் எடுத்தவன் யார்? முத்துக் குளித்தவன் யார்? வயல்கள் செய்தவன் யார்? வரப்புச் செதுக்கியவன் யார்? மாட மாளிகை கட்டினவன் யார்? நந்தவனம் வைத்தவன் யார்? அனுபவிப்பவன் யார்? என்று சோம்பேறிப் பாட்டு பாடினால் போதுமா? இது செய்தவர்கள் யார்? அனுபவிப்பவர் யார் என்று கடுகளவு அறிவுள்ளவனுக்கும் தெரியுமே! அதாவது மடையன், ஏமாளி, மானமற்றவன் செய்தான், தந்திரசாலி, வஞ்சகன், கடவுள் பிரச்சாரக்காரன் அனுபவிக்கிறான், ஆகவே மடையன் புத்திசாலியாகி மானமற்றவனுக்கு மான உணர்ச்சி ஏற்பட்டு இந்த நிலைமைக்குக் காரணம் நமது ஏமாளித்தனமே ஒழிய கடவுளல்ல, மதமல்ல, முற்பிறப்பல்ல, விதி அல்ல, இவையெல்லாம் புரட்டு; இவைகளைத் தகர்த்தெறிவது எனது முதல் வேலை என்று எவன் எண்ணுகிறானோ அவனே முதலாளிகளை, செல்வவான்களை மாட மாளிகை, கூடகோபுரங்கள், அரண்மனையில் வசிப்பவர்கள் ஆகியவர்களை ஒழிக்கத் தகுந்தவனாவான்.

**தந்தை பெரியார்**

குடியரசு 6-7-46

ஆசிரியர் : சேலம் பாவரசு

படிப்பகம்

www.padippakam.com

# பெண்கள்......

பெண் வெறும் பிள்ளை பெறும் கருவியாக இருக்கக் கூடாது சமுதாயம், நாடு, உலகம் முன்னேற வேண்டுமாயின் பெண் விடுதலை அவசியம்.

தந்தை பெரியார்.

பெண்ணுக்கு அவசியம் இருக்க வேண்டியது அன்பான இதயம்.

மாக்சிம் கார்க்கி

மிக உயர்ந்த சமுதாயமாயிருந்தாலும் மிகத் தாழ்ந்த சமுதாயமாயிருந்தாலும் பெண் வெறும் வேடிக்கைப் பொருளாகத்தான் பயன்படுகிறாள்

தால்சுதாய்

நோயைத் தருபவளும் பெண்ணே அதற்கு மருந்தும் பெண்ணே.

திருக்குறள்

துன்பத்தைத் தருபவர்களும் பெண்கள்தான். அதைத் தீர்ப்பவர்களும் பெண்கள்தான்

செல்லி

குழப்பம் என்பதன் மறு பெயர்தான் பெண்,

பைரன்

ஆண் இனம் தங்களை அடிமை கொண்டு விட்டதாகப் பெண்கள் அலறுகிறார்கள். உண்மையைப் பார்க்கப் போனால் அவர்களுக்கு அடங்கி வாழ்பவர்கள் ஆண்கள்தான்.

வி. இ. இலெனின்

வானத்தை வில்லாக வளைக்கவும், மணலைக் கயிறாகத் திரிக்கவும், ஏழுகடலை ஒரேயடியாகத் தாண்டவும் ஆண்கள் தயாராக இருக்கிறார்கள். இதெல்லாம் எதற்காக என்றால் பெண்ணின் கடைக்கண் பார்வைக்கே.

உமர்கயாம்

உலகம் உய்வதற்கான வழி தேடிப் போராடிய உத்தமர்களின் வரலாற்றை ஊன்றி நோக்கும் போது ஓர் உண்மை புலப்படுகிறது. அத்தகைய தீரர்களின் உணர்ச்சிகளுக்கு உறுதுணையாக ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பெண் வாழ்ந்திருக்கிறாள் என்பதுதான் அது

பெர்னாட்சா

ஆண்களின் துணிவு ஆள்வதில் இருக்கிறது. பெண்ணின் துணிவு பணிவதில் இருக்கிறது. ஆனால் மவுனமே பெண்ணிற்குப் புகழைத் தருகிறது.

பிளேட்டோ

பெண்ணுக்குப் பலம் குறைவுதான், ஆனால் அவர்களிடம் உள்ள துணிச்சல் ஒரு ஆணுக்கு உள்ளதைவிட அதிகம்

காந்தி

பெண் வழுவழுப்பான களிமண்ணைப் போன்றவள்! ஆண்தான் அதில் கலைபழகை உருவாக்க வேண்டும். அவ்வாறு உருவாக்க இசைந்து கொடுப்பவள்தான் பெண் !

அரிசுடாட்டில்

பெண்களால் உலகம் அழிந்ததுண்டு; உண்மைதான். ஆனால் அழிவிலிருந்து உலகத்தைக் காப்பாற்றி வருபவர்களும் பெண்கள்தான் என்ற உண்மையை மறுக்க முடியாது.

சாக்ரடீசு

# உலக அரங்கில் தமிழர்கள்...

| நாடு | ஆண்டு | தமிழர்தொகை |
|---|---|---|
| தமிழ்நாடு | 1978 | 5 கோடி பேர் |
| இலங்கை | 1976 | 40 இலட்சம் பேர் |
| மலேசியா | 1975 | 11 இலட்சம் பேர் |
| தென்னாப்பிரிக்கா | 1970 | 5 இலட்சம்பேர் |
| பர்மா | 1973 | 2 இலட்சம் பேர் |
| சிங்கப்பூர் | 1970 | 16 இலட்சம் பேர் |
| மொரிசியசு | 1972 | 90,000 பேர் |
| இங்கிலாந்து | 1978 | 55,000 பேர் |
| பீஜி | 1976 | 35,000 பேர் |
| அமெரிக்கா | 1978 | 50,000 பேர் |
| இந்தோனீசியா | 1978 | 20,000 பேர் |
| பிரான்சு | 1978 | 20,000 பேர் |

ரியூனியன், குவாடலூப், கயானா, டிரினிடாட் நாடுகளில் பல ஆயிரக்கணக்கான தமிழர்கள்பெயரளவில் கூட தமிழர் இல்லாத நிலையில் மாறி வருகின்றனர். மேற்கூறிய நாடுகளை விட கனடா, நைசீரியா, சாம்பியா, செர்மனி, குவைத், ஓமான், அபுதாபி, பகரீன், ஹாங்காங், ஆத்திரேலியா, நியூசிலாந்து, சுவிட்சர்லாந்து, நார்வே ஆகிய நாடுகளிலும் தமிழர்கள் குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

www.padippakam.com

# சூளுரை



## ஏன் ?

எத்தனையோ இதழ்கள் வெளிவந்து கொண்டிருக்கும் போது "இயக்கம்" இதழை இவ்வேளையில் ஏன் வெளியிடுகின்றோம் என நீங்கள் எண்ணுவீர்கள்.

நாளுக்கு நாள் தமிழகத்தின் இளைஞர்கள் ஏமாற்றத்தினால் விரக்தியடைந்து. பாதைமாறி எங்கோ தூரத்தே ஒதுங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலை கண்டு எமது உள்ளம் வேதனையடைகின்றது. ஏனெனில் நாங்களும் இளைஞர்கள்; ஆனால் உறுதியும், நம்பிக்கையும் இழக்காதவர்கள். அதனால்ஓடிக்கொண்டிருக்கும் -ஒதுங்கிக்கெண்டிருக்கும்– இளைஞர்களை இழுத்துப் பிடித்து "இயக்கம்" காண விழைகின்றோம். நாளைய வாழ்வுக்குப்பொறுப்பானவர்களாக அவர்களை மாற்ற முனைகின்றோம்.

தமிழகத்தின் அடிமை நிலை தொடர்ந்து மேலும் மோசமாகிக் கொண்டிருக்கின்றது தந்தைபெரியாரின் பெரும் பணிக்குப் பின்னரும் சாதிச்சண்டைகள் தொடர்கின்றன.

கடந்தகால தலைநரைத்த தலைவர்களும், வெற்றுக் கொள்கைகளும், தமிழினத்தை, தமிழகத்தை எங்கோ அதலபாதாளத்தை நோக்கி இட்டுச் செல்வதாக உணர்கின்றோம்.

இந்நிலை நிறுத்தப்பட வேண்டும் என்று சூளுரைக்கின்றோம். இதன் முதற்பணியாகத்தான் இவ்விதழ் மூலம் இளைஞர்களைச் சந்திக்க விரும்புகின்றோம்; எமது கருத்துகளைக் கூற விழைகின்றோம்; கூறுவதோடன்றிச் செயலிலும் காட்டிட முனைந்துநிற்போம் உங்கள் ஒத்துழைப்போடு.

நிச்சயமாக எமது கருத்துகள் "சுரண்டலற்ற" புதிய சமுதாயத்தைத் தமிழகத்தில் உருவாக்கும் என நம்புகிறோம்.

நாம் எமது இலட்சியமாகத் தமிழர் வாழ்வின் அடிப்படையையே மாற்ற உறுதி பூணுகின்றோம். தமிழினத்தை ஒடுக்க முனையும் எந்தச் சக்தியையும் எதிர்த்து வெல்வோம்.

அதே சமயத்தில் உலகில் எந்தப்பகுதியில் இன ஒடுக்கல் நடைபெற்றாலும் அதை எதிர்த்து எமது குரல் ஓங்கி ஒலிக்கும். எமது கைகள் அவர்களை நோக்கி நீளும்

இளைஞர்களே! இவ்வியக்கம் உங்களுடையது, உங்களுக்கானது. இதனை வளப்படுத்துவது, வளரச்செய்வது அதன் இலட்சியங்களை வெற்றிபெறச் செய்வது உங்கள் பொறுப்பு.

முதல் இதழிலேயே நாங்கள் அதிகமாகப் பேச விரும்பவில்லை.

மீண்டும் மீண்டும் சந்திம்போம்.

---

## இளைஞர்களால்தான் முடியும்

எந்தத்தேசமும் எந்தச் சமூகமும் பெரும்பாலும் அவ்வத்தேசத்தின் வாலிபர்களைக் கொண்டுதான் முன் வந்திருக்கிறதே அல்லாமல், பெரியோர்களையும் முதியோர்களையும் கொண்டல்ல. உலகவாழ்க்கையில் ஈடுபட்ட பெரியோர்களிடம் பொதுநலமும் தியாகபுத்தியும் காண்பது மிக அரிது. சுயநலம்தான் வளர்ந்து கொண்டுபோகும். அவர்கள் பொதுநலத்திற்கு உழைப்பதாய்க் காணப்படுவது அவர்களுடைய சுயநலத்தை உத்தேசித்துதான் என்று உறுதியாய்ச் சொல்லுவேன்.

தந்தை பெரியார் 12-9-1926

படிப்பகம்

www.padippakam.com

# ஆதிக்க வெறி



உங்களுக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்வேன் இது மொழிப் பிரச்சினை அல்ல. இது ஆதிக்கப் பிரச்சினையே தவிர மொழிப்பிரச்சினை அல்ல. நாம் எந்த அளவிற்குப் பணியத்தயாராக இருக்கிறோம் என்பதைக் கண்காணிப்பதற்காக — அளவிடுவதற்காக அரசியல் ஆதிக்கக்காரர்கள் அரசியல் சூழ்ச்சிக்காரர்கள், ஏகாதிபத்திய வெறி கொண்டவர்கள், தங்களுடைய மொழியைத் திணித்து, 'இதைத்தான் நீ ஆட்சி மொழியாகக் கொள்ள வேண்டும். இதிலேதான் பாடங்கள் நடக்கும் இதிலேதான் தேர்வுகள் நடக்கும். இதிலேதான் சட்டங்கள் இயற்றப்படும். இந்த மொழியிலேதான் பாராளுமன்றத்தில் பேசுவார்கள். இது தெரிந்தால் இங்கெல்லாம் வா— இதுதெரியாவிட்டால் நீலகிரித்தோதுவார்களைப் போல், குருவிக்காரர்களைப் போல், ஆப்பிரிக்கநாட்டு நீக்ரோக்களைப் போல் நீயும் உன்னுடைய நாட்டோடு கூட்டோடு, இரண்டாந்தரக்குடிமகனாய், மட்டரகமான மனிதனாய் ஏனோதானோவாய், எடுப்பார் கைப்பிள்ளையாய் அடங்கிக்கிட' என்பதுதான் உட்பொருளாகும்.

—அறிஞர் அண்ணா

## தமிழ் நாடு அரசு கவனத்திற்கு!!

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநர் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் பணி சிறப்பாக நிறைவுற அத்திட்டத்திற்கு ஒரு கோடி உரூபாய் ஒதுக்குக. அவருக்கு மகிழுந்து மற்றும் தேவையான உதவிகளைச் செய்க. இயக்குநரகத்தை குதிரைக் கொட்டடியிலிருந்து நல்ல கட்டடத்திற்குமாற்றிட ஏற்பாடு செய்க.

விரைந்து அகரமுதலி நூல் அச்சிட்டு வெளியிட அனைத்து ஏற்பாடுகளையும் செய்க

### "தடை"

மதமே மனிதனுடைய சுதந்திரத்திற்கு விரோதி
மதமே மனிதனுடைய அறிவு வளர்ச்சிக்கு விரோதி
மதமே மனித சமூகசமதர்மத்திற்கு விரோதி
மதமே கொங்கோலாட்சிக்கு உற்றதுணை
மதமே முதலாளி வர்க்கத்திற்கு உற்றகாவல்
மதமே சோம்பேறி வர்க்கத்திற்கு ஆதரவு
மதமே உழைப்பாளனை சரித்திரத்தில் ஆழ்த்தி உழைக்காதவனை உச்சத்தில் வைப்பதற்கு உதவி

தந்தை பெரியார்

## தமிழா நீ...!

"எழுங்கள், எழுங்கள்! இன்றே எழுங்கள்! இல்லையேல் நாளை தடைகள் அதிகமாகிவிடும்"!

அறிவு, ஆற்றல், ஒப்பு உவமையற்ற அழகு, குளிர் தென்றல், சொற்களால் சொல்லவியலாத இயற்கையின் சிரிப்பு— இயற்கைதமிழ் நிலத்தில் உனக்கு எல்லாவற்றையும் அளித்திருக்கிறது. உனக்கு வளமிக்கதமிழ்நாட்டினையும் ஈந்துள்ளது. அதை ஏன் நீ உணரவில்லை? நாகரிகப்படுத்திய ஒவ்வொரு நாட்டுக்காரனையும் பார்த்து நீ யாரென்று கேட்டால் அவன் பெருமையுடன் பதில் சொல்கிறான் நான் பிரெஞ்சுக்காரன், நான் ஆங்கிலேயன், நான் சீனன், நான் உருசியன் என்று. ஆனால் நீயோ உனது உள்ளக் கிடக்கையை சொற்களில் வடித்து "நான் தமிழன்" என்று விடை கூறத் தயங்குகிறாய்! என்னே உன் நாட்டுப் பற்று!"

## இந்திய அரசே! தமிழ்நாடு அரசே!!
## தமிழக மீனவர்களைச் சுட்டு, வலைகளைப் பறித்த இலங்கை அரசு மீது நடவடிக்கை எடு!

www.padippakam.com

# குமரிக்கடலே பொங்கி எழு!

**வை. தமிழ்க்குமரன்**

தென்மதுரைத் திருநகரைச் சூழ்ந்திருந்த பெருநாட்டை ஒரு முறையும், கதவபுரத் (கபாடபுரம்) தலைநகரைச்சூழ்ந்திருந்த திருநாட்டினை மறுமுறையும் அலைவாய்க்குள் அடைத்துக் கொண்ட குமரித்தாயே; குமரிப்பெருநிலமும், மலைமுகடும் உன் பெரும் பசியைத் தீர்த்ததற்கு அடையாளமாக ஈழமெனும் சிறுநிலை விட்டு வைத்தாய்! தொன்மைத் தமிழ் நிலத்தின் சான்றுகாட்ட நீ ஈன்ற குழவிதான் ஈழம். உன் கனிவுக்கு ஈடுமாறு உண்டோ தாயே... நீ ஈன்ற குழவிக்குத் தோன்றும் இடுக்கண் களைந்திட, நீர்க்கோத்தாள் அணைத்துத் தமிழ் நிலத்தோடு தொடர்பின்றிச் செய்த உன் உள்ளக்கிடக்கை உணர்தற் கியலுமோ அம்மா.. என்றெல்லாம் உன்னை ஏற்றிப் போற்ற மனமில்லை.

கொடியவளே...! உன் மடி மீது கிடந்த குமரி நாட்டைப் பற்றிக்கொண்டும் கடிக்காமல் கற்கண்டு போல் விழுங்கிச் சுவைத்தவளே; குமரி மலையரசன் உன் கொடுஞ் செயலைப் பொறுக்காமல், அலைவாய்க்குள் சென்ற போது, உடைந்த பல் தான் ஈழமோ. பல்லுடைந்த பின்புதான் நல்லறிவு பெற்று அடங்கிக் கிடக்கின்றாய் போலும் என் தமிழ் நாட்டு மண்ணையும், அம்மண்ணில் தோன்றிய முதல் மாந்தர் இனத்தையும், தமிழ்ப் பெரு நூற் தவியலையும் வேரோடும், வேரடி மண்ணோடும் விழுங்கிய இரக்கமற்ற அரக்கியே! ஈழ நாட்டிற் சிறுமணல் மேட்டை ஏன்விட்டு வைத்தாய்? பகைவேல் கண்டும் கண் இமைக்காத வீரமும், கைவேல் களிற்றொடு போக்கி மெய்வேல் கண்டுநகைக்க ஆண்மையும் கொண்ட இனத்தை ஏதிலியாய்ச் சாழிப்பதற்கா! மாற்றார் மனம்புகாக் கற்பின் மாண்பை ஏற்று வாழ்ந்த செந்தமிழ் மகளிர் கற்பு இலங்கைச் சிறு மேட்டில் அழிவதற்கா? அந்த மண் மேட்டில் செந்தமிழ் நாட்டவர் கொட்டிய குருதி போதாதா? சிங்களப் பேடியர் வெட்டிய தமிழ்மறவர்கள் கணக்கும் மறந்ததே...! எத்தனை முறைதான் அந்த நரிகள் தமிழர் குருதியைச் சுவைப்பது. புத்தத் துறவியரும் கத்தி எடுத்த கதையும் மறக்குமோ..... இத்தனைக்கும் என்ன பிழை செய்தார் தமிழர்! தனி நாடு கேட்டது பிற்கால வரலாறு. மொழியுரிமை கேட்டார். வேறுபாடு இல்லாத கல்வி முறை பணிவாய்ப்பு இவ்வளவே. இது கூட இல்லாமல் குடியுரிமை எதற்கென்று அறப்போர்

---

### பெருக்கமும், சுருக்கமும்

உற்பத்தித் திறனுள்ள மூலதனம் எவ்வளவுக்கு எவ்வளவு வளருகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு உழைப்புப் பிரிவினையும் இயந்திரச் சாதனங்களது பயன்பாடும் எவ்வளவுக்கு எவ்வளவு விரிவடைகின்றனவோ அவ்வளவுக்கு அவ்வளவு தொழிலாளர்களிடையே போட்டி விரிந்து பெருகிறது. அவ்வளவுக்கு அவ்வளவு அவர்களுடைய கூலி சுருங்குகிறது.

மார்க்சு

---

### அடிமைத்தனம்

நாம் செத்துப் போனால்நமது பெண்டு பிள்ளைகளை யார் காப்பாற்றுவார்கள் என்று எண்ணுவது அடிமைத்தனத்திலெல்லாம் முதலாவது அடிமைத்தனமாகும்

தந்தை பெரியார்

---

# அன்னைத் தமிழ்ஈழ அரியணை ஏற்று!

படிப்பகம்

www.padippakam.com

தொடுத்தார். சிங்கள அரக்கர் தந்ததெல்லாம் கத்திக் குத்துகளும், கற்பழிப்புப் பரிசுகளும். தாங்கிக்கொண்டு வாழக்கற்காத இனமாயிற்றே தமிழினம். அறப்போர் முறை தொடுத்தார் தமிழர். பரிவு காட்டுவது போல் கை நீட்டும் சிங்கள அரசு. பெருந்தன்மை பிறப்பிலேயே அமைந்த இனமாயிற்றே, அவர்கள் கூறும் ஒற்றுமைக் கருத்தை ஏற்று நடந்ததை மறந்து அமைதி தவழும் அரசு கொடுத்த உறுதிமொழி காற்றிலே பறக்கும் சட்டங்கள் மாறும் மறுபடியும் பிணங்கள் விழும்; சிறைக்கோட்டங்கள் தமிழர்களால் நிறையும். சிங்கள மாந்த விலங்குகளால் கற்பழிக்கப்பட்ட தமிழ் மகளிர் பிணங்கள் இலங்கைக்காடுகளில் கொடிய விலங்குகளால் சிதைக்கப்படும் இந்த அவல வரலாறு முடியாதா? இந்த வினாவுக்கு விடையாகப் பிறந்தது தான் இலங்கைத் தமிழ்நாடு. முப்பதாண்டு காலக் கொடுமைகளுக்குப் பிறகு எடுக்கப்பட்ட முடிவு

ஆட்சி மாறும், அமைச்சர்கள் மாறுவார்கள் தமிழர்களின் நிலைமாறுவதில்லை. தமிழர்களின் உரிமைகளில் கை வைத்த முதல் ஆள் பண்டார நாயகா. கணவரின் பணியைத் தமிழர்களைப் பொறுத்த வரை சிறிதும் மாறாமல் செய்து வந்தார் மனைவி சிரிமாவோ பண்டாரநாயகா. ஆட்சியிலிருந்தால் சட்டத்தின் மூலம் தமிழர்களின் உரிமைகளைப் பறிப்பது ஆட்சியில் இல்லாவிட்டால் இதுபோன்ற கலவரங்களை ஏற்படுத்தித் தமிழர்களை ஒடுக்குவது. இது தான் தமிழ் இனத்தைப் பொறுத்த வரை பண்டார நாயகா குடும்பத்தின் வழக்கம்.

ஈழத்தில் தொல்லை படுபவர்கள், துன்புறுத்தப் படுபவர்கள், கற்பழிக்கப்படுபவர்கள் தப்பி வருவதற்கு நம் இடையிலே கடல் தடையாய் இருக்கின்றது. இந்நிலையில் இந்திய அரசு செய்யக் கூடிய எந்தச் செயலும் அயல் நாட்டுக் கட்டுப்பாடுகளை மீறுவதாக முடியும் என்று நடுவண் அரசு சொல்லுவதற்கு முன்பே மாநில அரசு கூறி விடும். இது பேராய ஆட்சிக் காலத்தின் போது நடந்ததைப் போலவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் நடக்கிறது. இலங்கைத்தமிழர்கள் மேல் நடுவண் அரசு இரக்கம் காட்ட வேண்டுமென்றால் அதற்கு ஒரு வாய்ப்பு உள்ளது. இலங்கை கலவரங்களுக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் 1964-ம் ஆண்டில் ஏற்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைக் கைவிடுவதாக அறிவித்து, இனிமேல் இலங்கையிலிருந்து தமிழர்களை ஏதிலிகளாக ஏற்றுக்கொள்ளமுடியாது அவர்கள் இலங்கை குடிமக்களே என அறிவிக்கவேண்டும்.

இதனால் இலங்கை அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்தது போலவும் இருக்கும். இலங்கை வாழ் தமிழர் மிகச்சிறுபான்மை இனமாக மாறிவிடாமல் வலிமை சேர்த்ததாகவே அமையும். என்ன செய்யப் போகிறது இந்திய நடுவண் அரசு? தூதர் சென்று பார்வையிடுவதாலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்று கண்டு வருவதாலும் கலவரத்தில் சிக்கிச் சீரழியும் தமிழர்களுக்கு எந்தப் பயனும் ஏற்பட்டுவிடப்போவதில்லை. இலங்கைத் தமிழர்களை காப்பதற்கு இந்திய நடுவண் அரசு எடுக்கும் குறைந்த அளவான நடவடிக்கை 1964-ம் ஆண்டு ஒப்பந்தத்தைக் கைவிடுவதாக அறிவிப்பதுதான். பார்வையிடுவதாலும் அறிக்கை கேட்பதாலும், தீர்மானத்தாலும் எந்தப் பயனும் இல்லை என்பது உறுதி. வெறும் கண்துடைப்பாகவே அமையும்.

இருமுறை தமிழ் நிலத்தை விழுங்கி ஏப்பம் விட்ட கடல் அரக்கியே! அந்தோ இலங்கைத் தமிழர்களின் அவலக்குரல் உனக்கு கேட்கிறதா? உன் அலை ஓசையில் கேட்கிறதா? இல்லை. தமிழ் வேந்தர்களின் மரக்கலங்கள் பாய்ந்தோடிய உன் வயிற்றில் சிங்கள விலங்குகளால் கற்பழிக்கப்பட்ட எத்தனை ஆயிரம் தமிழ்ப்பெண்களை அடைக்கலமாக ஏற்றுக் கொள்ளப் போகிறாய்! குலமகளிர் கட்டத்தை இருமுறை விழுங்கிய நீ கற்பழிக்கப்பட்ட உடல்களை விழுங்கித்தான் அமைதியடையப் போகிறாயா? கூலிகளாய்த் தமிழ் நாட்டு வேலி தாண்டி சென்றது போதாதா? எந்த நாட்டு மண்ணில் தமிழர் காலடி படவில்லை; எந்த நாட்டு மண்ணிலே தமிழர்கள் குருதி கொட்டி உழைக்கவில்லை? ஆப்பிரிக்காவிலே அடைந்த கொடுமையும், பர்மாவிலே பட்ட இன்னலும்,

---

### ஒன்றோடு ஒன்று

மூலதனத்துக்கு முன் தேவை கூலியுழைப்பு; கூலியுழைப்புக்கு முன்தேவை மூலதனம். ஒன்று மற்றொன்றின் முன்னிபந்தனையாய் அமைகிறது, ஒன்று மற்றொன்றைத் தோற்றுவிக்கிறது.

மார்க்சு

---

### உலகத்திலேயே மிகவும் அழகானது

உலகத்திலேயே மிகவும் அழகானது என்னவென்றால் மனித விடுதலைக்காகப் போராடுவது தான்.

புரட்சி விடுதலை வீராங்கனை 'டானியா'

---



படிப்பகம்

www.padippakam.com

ஈழத்திலே ஏற்பட்ட இழிநிலையும் உலக வரலாற்றில் வேறெந்த இனமாவது பட்டதுண்டா? எல்லாம் யாரால்? ஆத்திரேலியாவையும், ஆப்பிரிக்காவையும் அணைத்துக் கொண்டிருந்த குமரிக் கண்டத்தைவிழுங்கிய கொடியவளே; குமரிக் கடல் அரக்கியே உன்னால்தான் இதுவரைபட்டதெல்லாம் இலங்கைத் தமிழர் கெட்டதெல்லாம் போதும் விட்டுவைக்காதே இலங்கைத்தீவை, பல்லாயிரம் அலைக்கரங்களை ஒன்றிணைத்துக் குமரிநாட்டை விழுங்கிக்களித்தாயே. அதைப் போன்று இலங்கைத் தீவைத் தாவியணைத்துத் தமிழினத்தை விழுங்கிவிட்டுச் சிங்கள இனத்தை அமைதியாக வாழ விடு! ஒரே ஒரு தமிழன் அங்கே இருந்தாலும் சிங்களவர்களால் தாங்கிக் கொள்ள முடியாது. கடல் அரக்கியே உன் உடலில் எங்கேனும் பெண்மையின் தன்மை சிறிதளவேனும் இருக்குமென்று நம்பிக்கையோடு மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். உன்னால் தமிழர்களை அமைதியாக வாழ்விக்க முடியாது. ஆழ்கடலே உன் பாழ்வயிற்றில் அவர்களை அடைக்கலமாக ஏற்றுக்கொள்! தயங்காதே. விழுங்கி விழுங்கிப் பழக்கபட்டவள் தானே. குமரிக் கடலே பொங்கி எழு...! எங்குமில்லை தமிழர். பகைவர்களே உங்கள் கொடுமைக்கு ஆளாக எங்குமிலை தமிழர் என்னும் நிலையை உருவாக்கு! ஏ..... குமரிக் கடலேபொங்கி எழு...

# கார்ல்மார்க்சின் காதல்!

காரல் மார்க்சும் சென்னியும் குழந்தைப் பருவத்தில் மிக நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். காலம் செல்லச்செல்ல அவர்களுக்கிடையில் இருந்த ஆழமான அன்பு காதலாக மலர்ந்தது. உணர்வுகளிலேமாத்திரமல்ல.ஒரேமாதிரியான பண்பொத்த உணர்ச்சிவேகம், விசை வேகமான மனப்பாங்கு நிலை கொண்ட ஒரு இளைஞனுக்கும், எப்போதும் அணியமாகவுள்ள அனுதாபத்துடன் கூடிய அழகு மிக்கவளும் பெண்மைக்கு இலக்கணமானவளுமான ஒரு இளம் நங்கைக்கும் இடையில் ஒரு பிரிக்க முடியாத அன்புப் பிணைப்பை உண்டாக்கிவிட்டது. சென்னி, மார்க்சினுடைய மிகுந்த ஆற்றல்களையும் தலைசிறந்த மனிதச் சிறப்புகளையும் நன்கு அடையாளம் கண்டுகொண்டு அவருக்குத் தகுதியான தோழமை மிக்க மனையாளாக இருக்க அரும்பாடுபட்டாள். காரல் சென்னியைப் போற்றிப் புகழ்ந்தார்.காதலர்கள்வழக்கப்படி செய்வதைப் போல மார்க்சு தனது உணர்ச்சிப் பெருக்குகளைத் தனது கவிதைகள் மூலம் அனுப்பினார். அப்படிப்பட்ட கவிதைகளில் ஒன்று இங்கே தரப்படுகிறது.

கட்டுண்ட எனதுள்ளம் தெளிவடைய
ஒளிமிக்க எனதுநிறை உயிரின்
கண்ணோக்கு உயர்ந்தோங்க '
நானும்தான்
தெளிவின்றி எதையோ நம்பி
தேடித்தான் அலைந்த போது
அதை யெல்லாம்
கடைசியில் உன்னில்தான் நான்
கண்டு கொண்டு களிப்படைந்
தேன் கண்மணியே.
நான் எனது கடுமை மிக்க
முள் நிறைந்த வாழ்க்கையதன்
வழியையெல்லாம்
கடந்து செல்லத் தேவையான
திறமையெல்லாம்
அடையத்தானும்
இடருற்றுத் தவறி நின்று
தயங்கிய நாளில்
சொல்லாமல் அழைக்காமல்
அவையெல்லாம் தேடி வந்து
என்னைத்தான் அடைந்ததென்றால்
மாயப் பார்வை மிக்க உன்
மந்திரக் கண்களின்
ஒளியன்றி வேறில்லை கண்மணியே.

கார்ல் மார்க்சு
வாழ்க்கைவரலாற்று நூலிலிருந்து

## அனைத்து மாநில மொழிகளையும் ஆட்சி மொழியாக்கு

# தோழர் 'குணா'

அவர்களின் தீந்தமிழ்ப் படைப்பு

## 'மார்க்சிய இயங்கியல்'

விலை உருபாய் 12/-

நூல் கிடைக்குமிடம் :

மறைமலையடிகள் புத்தக நிலையம்
18-பி, காளியம்மன் கோயில்
மூன்றாவது தெரு, அலசூர்,
பெங்களூர்-560 008.
கர்நாடகம்


## இயக்கத் தோழர்களே,

'இயக்கம்' இதழ் கிடைத்ததும் தங்களுடைய ஆண்டு உறுப்பாண்மைக் கட்டணத்தை அனுப்பியுதவுக.

சேலம் பாவரசு. (இயக்கம்)
16, அரங்கநாதபுரம்.
சென்னை-600081,

## 3. பேய்கள் 5 நோய்கள்

1, கடவுள் 2 சாதி 3 சனநாயகம்
1 பார்ப்பான் 2 பத்திரிக்கை 3 அரசியல்கட்சிகள் 4 சட்டசபை 5 சினிமா

தந்தை பெரியார்


# தோழர் 'குணாவின்'

## 'சாதியத்தின் தோற்றம்'

விலை உருபாய் 6/-

நூல் கிடைக்குமிடம் :-

தென்றல் வெளியீடு,
4, காமராசபுரம் ; ஆர். எசு. புரம்
கோவை-641 002.


# தமிழா, வெட்கப்படு!

தாயகத்தைத் தருக்கர்கள் அடிமைப் படுகுழியில் தள்ளிய போது, செல்வத்தைச் சுரண்டிய போது, தொழில்களை நசுக்கிய போது அறிவை அழித்தபோது. தன்மானத்தை ஒழித்தபோது, அடக்குமுறையை அவிழ்த்துவிட்டபோது உன்னை ஈன்றெடுத்து இயல்புகளை அளித்து, இயற்கைச் செல்வத்தால் உன்னை ஊட்டி வளர்த்த தாயகம் தலைவிரிகோலமாக்கப்பட்டு மானமழியும் நிலைக்கு ஆளாக்கப்பட்டு, வடவரால் வதைக்கப்பட்டபோது, என்ன செய்து கொண்டிருந்தாய்! ஏதுமறியாத ஏமாளியாக இருந்தாயா? என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துக் கிடந்தாயா? அங்ஙனமாயின், நீ ஓர் அப்பாவி! வீரக் குலத்தில் தப்பிப் பிறந்த பதர்! விளக்கமறியாத வீணன்! தூ தூ! திருவும், அறிவும், வீரமும், மாண்பும் பொங்கும் நாட்டிலேயா இத்தகைய ஏமாளி பிறந்திட வேண்டும்! உன் தாயகம், தன்னரசு இழந்ததை, தன்மொழி இழந்ததை, விழியைக் குளமாக்கிக் கொண்டதைக் கண்டறியும் அளவுக்குமா உனக்கு கருத்துத்தெளிவு ஏற்படாமற் போய்விட்டது! ஏடா! மூடா!! உன்னைச் சுற்றிலும் அழகிய மலையும், எழிலோங்கும் ஆறுகளும், பச்சைப் பசேலென்ற வயலும் பாங்கான பல தருக்களும் இச்சையூட்டத் தக்க எத்தனையோ வளம் இருந்தும் வறுமை நம்மை வாட்டிடக் காரணமென்ன உழைப்பு ஏன் வீணாக்கப்படுகிறது உண்டுக்கொழுத்திடுபவன் உழைத்திடக் காணோமே. அது ஏன்? கொட்டிக் கொடுக்கும் வரிப்பணம் வேறெங்கோ கொண்டு செல்லப்படுகிறதே. சரியா? பட்டியில் மாடுகள் போல, ஆளவந்தார்கள் உள்ளனரே முறையா? என்றெல்லாம் எண்ணிப் பார்த்திடத் தெரியவில்லையா உனக்கு. பேதையே! அறிவுக் களஞ்சியத்தின் அழகினைக் கெடுத்திடும் வம்பனைச் சின்னமே! வெட்கப்படு! வெட்கம் வேலாகிக் குத்தட்டும் உன்னை! தலைகுனிந்து நட! தையலரும் தன்னரசுக்கான போர் புரிய முன்வந்தபோது, அசை போட்டுக் கொண்டு கிடந்தோமே என்றெண்ணி, முக்காடிட்டுக் கொண்டு நட! விடுதலைப் போரிலே வீழ்ந்துபட்ட வீரர், நடந்து சென்ற பாதையில் காணக் கிடக்கும் குருதிக் கரையிலே கண்ணீர் சொரிந்து வேண்டிக்கொள்.

அண்ணா 18-9-1955 தம்பிக்கு

(தமிழ் இளைஞர் இயக்கத்திற்காக சேலம் பாவரசு அவர்களை ஆசிரியராகவும் வெளியிடுபவராகவும் கொண்டு கலைமணி கலை அச்சகம், சென்னை-1 இல் அச்சிட்டு 16, அரங்கநாதபுரம், சென்னை-60 0081 என்ற முகவரியிலிருந்து வெளியிடப்படுகிறது)